# ஆத்ம ஜோதி



அப்பர் சுவாமிகள்

குருபூசைத்திருநாள் 20-4-52

ஓம்

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீகமாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே'
—சுத்தானந்தர்

சோதி 4 — நந்தன ஹு சித்திரைமீ 1 திகதி சுடர் 6

## பொருளடக்கம்



| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| பூரணசரணாகதி | ... | 141 |
| அடைக்கலம் | ... | 142 |
| சரணாகதி | ஆசிரியர் | 143 |
| சைவமும்-வைணவமும் | சுத்தானந்தர் | 147 |
| உலகம்-துன்பம் | பரமானந்தவல்லி அம்மையார் | 149 |
| புத்தியில்லா மனமே | பரமஹம்சதாஸன் | 153 |
| அன்பின் சக்தி | டர்பன் ச. மு. பிள்ளை | 154 |
| புராதனக்கோவில்கள் | திருவருள் | 158 |
| உய்யும்வழி | அநாமதேயம் | 162 |
| ஆத்மசிருஷ்டி | ராதாகிருஷ்ணன் | 164 |
| பக்திப்பிரகாசம் | ஸ்ரீசிவானந்தமுனிவர் | 167 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்.

ஆயுள்சந்தா ரூபா 75|- வருடசந்தா ரூபா 3|—

தனிப்பிரதி சதம் -|30

ஆத்மஜோதி நிலயம் நாவலப்பிட்டி இலங்கை

# பூரண சரணாகதி.

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே" —அப்பர்

[பொழிப்புரை] நமது முருகக்கடவுளைப் பெற்றவளான உமா தேவியை வாமபாகத்திலுடையவரும், தென்சேயுள்ள திருக்கடம் பூர்த்தலத்திலுள்ள திருக்கரக்கோவிலில் எழுந்தருளி யிருப்பவரு மானபெருமானுடைய கடமையாவது, அவன்து அடிமையான் என்னையும் பேணிப்பாதுகாத்தலாம்; என்து கடமையாவது, அவருக்கு [இடைவிடாது]திருத்தொண்டு செய்து, (என்க்கென் ஒன்றுமில்லாது, எல்லாம்அவனேயென்று] கிடத்தலே.

[விருத்தியுரை] ஆண்டான் –அடிமைத்திறத்தை உலகுக்கருள அவதரித்தவர் அப்பர் சுவாமிகள். அவர் இப்பாட்டில் ஆண்டவன் ஆகிய சிவபெருமானும் அவனின் அடிமையானதானும் ஒருவர்க் கொருவர் செய்யவேண்டியகடமைகளை விளக்கியுள்ளார். ஆண்ட வனின் கடன் தன்னையே கதியென்று தஞ்சமடைந்தஅடிமையை ஆதரித்துக்காத்து உய்யும்படிசெய்தலாகும். அடிமையின் கடமை ஆண்டவனுக்குப் பிரியமான தொண்டுகளை செய்து கொண்டு, அப்படிச்செய்யும் தொண்டெல்லாம் அப்பெருமானருளால் நடப் பவை என்ற உணர்ச்சியுடன் கிடப்பதாகும்' உயிருள்ள பொரு ள்களின் தொழிலான படுத்தலைக்கூறாது, இங்கே உயிரற்றபொரு ளின்தொழிலான "கிடத்தலை"க்குறித்தது அடிகள் நமதுபூரண சரணாகதியால் ஏற்பட்டுள்ள தற்போத இழப்பைவிளக்கும் பொரு ட்டேயாம்.

# அடைக்கலம்

வழங்குகின் றுய்க்குன் னருளார முதத்தை
வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினையே
னென்விதியின்மையால்
தழங்கரூந் தேனன்ன தண்ணீர்பருகத்தந்
துய்யக்கொள்ளாய்
அழுங்குகின்றேனுடையாயடியேனுன்
அடைக்கலமே. —மாணிக்கவாசகர்

மற்றுநான் பெற்றது ஆர்பெறவல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமேசெயினும் குணமெனக்கொள்ளும்
கொள்கையால் மிகபலசெய்தேன்
செற்றுமீதோடுந் திருபுரமெரித்த திருமுல்லை
வாயிலாய்அடியேன்
பற்றிலேன் உற்றபடுதுயர்களையாய்
பாசுபதாபரஞ்சுடரே —சுந்தரர்

கடையேனுள்ளக் கவலையெலாங்
கழற்றிக் கருணையமுதளித்தென்
புடையே யகத்தும்புறத்துமகப்
புறத்தும்விளங்கும் புண்ணியனே
தடையேதவிர்க்குங் கனகசபைத்
தலைவா ஞான சபாபதியே
அடையேனுலகை யுனையடைந்தேன்
அடியேனுன்ற னடைக்கலமே.
—இராமலிங்கர்.

# சரணாகதி.

(ஆசிரியர்)

கர்மயோக சாதனையெல்லாம் சிவனை இறுதியில்கொண்டுவந்து சேர்க்கும் நிலையானது சரணாகதியாகும். இந்த அரும்பெரும் உண்மையை ஒப்பற்ற முறையில் விளக்கும் பொருட்டே, 'அர்ச்சுனா! சோர்வைவிட்டு, வீரனாய் எழுந்து, உன்கடமையைச் செய்." என கீதோபதேசத்தை ஆரம்பித்தகண்ணபிரான், "சர்வ தர்மங்களையும் தியாகம்செய்துவிட்டு என்னையே சரணடை. பாபங்களனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன். பயப்படாதே." என முடித்துள்ளார். கலியுகத்தில்வாழும் மனிதனுக்குக்கிடைத்துள்ள ஆயுள் அற்பமானது. இந்தச் சொற்பகால எல்லைக்குள் அவன் செய்துமுடிக்கவேண்டிய கருமங்கள் அநேகம். அவனது மனமோ சதா உலகபோகங்களை நாடி ஓடி அலையும்தன்மையுடையது. இந்தநிலையில் மனிதப்பிறப்பின் லட்சியமான கடவுள்தரிசனம் மிகக்கஷ்டமாகின்றது. எவ்விதகஷ்டமெனினும் அதைப் பெற்றேதீரவேண்டுமென்ற ஆர்வமுடையோருக்கு, சரணாகதியைவிட எளிதான மார்க்கம் பிறிதொன்றில்லை,

சரணாகதியென்றால் சொந்த எத்தனம் எதுவுமின்றிச்சோம்பேறியாய்ச்சும்மாய்உட்கார்ந்திருத்தல்என்பதல்ல; அல்லது நமது முயற்சிமாத்திரம் போதாது, கோரியபலன் அதனால்கிட்டவில்லை, ஆகையால் பகவானிடம் தஞ்சமடைந்து அவர் துணையையும்கொஞ்சம் தேடிக்கொள்ளல் என்பதுவுமல்ல, நமது சொந்த இச்சாசுதந்திரம்முழுவதையும் ஈச்வரசங்கற்பத்தில் சேர்த்துவிடுவதே சரணாகதியின் சரியானகருத்தாகும்: அது எது போலெனில், சிறியஓடையானது பெரியநதியுடன் கலந்துஓடிச்சென்று இறுதியில் சமுத்திரத்தில்சங்கமமானதைப்போலாகும். இறைவனைச்சரணடைந்து அவன் அருளையேநாடிநிற்பவர்க்கு அவனருளால் ஜீவபோதநீக்கமும் சிவபோத அநுபவமும் எளிதில் கிடைக்கின்றன: பரம்பொருள், உண்மை, அறிவு, இன்பம் ஆகிய மூன்று சொரூபங்களையுடையது, சாதகன் செல்லும்மார்க்கத்திற்கியைய, அவனது சரணாகதியும் வித்தியாசப்படும். கடவுளைப் பூரணமாக நம்பி, தனக்குநேரும் இன்பம் துன்பம், நன்மை தீமை, தர்மம்

அதர்மம் இவையெல்லாவற்றையும் அவர் கட்டளையாகக்கருதும் பக்தன், தாயின்மார்பில் அணைக்கப்பெற்ற சேய்போல் இன்புறுகிறான். இவ்விதத்தில் அவன் இறைவனின் ஆனந்த சொரூபத்தில் லயமாவது போலவே, யோகியும் ஞானியும் சத்து, சித்து ஆகியசொரூபங்களில் லயமாகிறார்கள்.

சரணாகதித்தத்துவத்தின் விரிவானவிளக்கத்தை வைஷ்ணவ நூல்களில் பரக்கக்காணலாம். அடைக்கல உறுதிக்கு ஆழ்வார்கள் ஒப்பற்ற உதாரணமாகப் போற்றப்படுகிறார்கள். புராணங்கள் மாத்திரமல்ல இதிகாசங்களும் அதே தத்துவத்தை வற்புறுத்துகின்றன. "தீயோரை அழித்து, நல்லோரைக்காத்து அவனியில் அறத்தை நிலைநாட்ட நான் காலத்துக்குக்காலம்அவதாரம் எடுக்கிறேன்" என்றருளியபெருமான், தம்மையே கதியெனச்சரணடைந்தோரைத் துன்பத்திலிருந்தும் விடுவிக்காமல் வேறு என்னசெய்வார்? இராவணனுடைய ஆட்சியில் வருந்தியதேவர்களின் முறையீட்டில் சரணாகதியின் விதையை விதைத்து இராமர் சரிதையை ஆரம்பித்தவால்மீகி முனிவர் அந்த விதையானது பின்னர் பெரியவிருட்சமாய் மாறியதைவிளக்குபவர்போல், நீயே கதி- உன்னைச்சரணடைந்தேன். வேறுகதியில்லை" என்று முழு நம்பிக்கையுடன் வந்தடைந்த விபீஷணனை இராமர் காப்பாற்றிய வரலாற்றை அழகாய் அமைத்துள்ளார். அம்மட்டோ! சரணாகதி பலிக்காமற்போகுங்காரணங்களையும் தெற்றெனத் தெரியத்தரும் நோக்குடன், எந்தலக்ஷணங்கள் பொருந்தியவனிடம் (சரண்யன்) தஞ்சம் புகவேண்டும், சரணாகதன் (தஞ்சமெனப் பற்றுவோன்) எவ்விதகுணங்கள் உடையவனாய் இருக்கவேண்டும் என்பதைஅருமையான உதாரணங்கள் மூலம் விளக்கியுள்ளார்: பரசுராமனிடம்தசரதன் செய்தசரணாகதியும், விபீஷணன் கேள்விக்கிணங்கி இராமர் சமுத்திரராசனுக்குச்செய்த சரணாகதியும் பலிக்காமற் போனகாரணங்களை உற்றுநோக்குக! பரசுராமனிடம் சரண்யனுக்குரிய தகைமையிருக்கவில்லை; இராமரிடம் சரணாகதனுக்கு வேண்டிய அனன்யகதித்வம் [வேறொருகதி இல்லாமை யெனும் குணம்] இருக்கவில்லை. இவைபோன்றபல நுட்பமான கருத்துக்களை அடக்கியிருத்தலினாலேயே இராமாயணம் "சரணாகதிநூல்" எனனும் பிரசித்தி பெற்றுள்ளது.

மகாபாரதத்தில் வியாசர் கையாண்டுள்ள முறை சில அம்சங்களில் விசேடமுடைத்தெனலாம். மேலே விளக்கிய இருதன்மைகளையும் ஒரே பாத்திர மூலம் அவர் காட்டும் ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். துரியோதனன் சபையில் நடந்த திரௌபதி வஸ்திராபஹரண நிகழ்ச்சியில் அது அமைந்துள்ளது. மலர் மறந்த குழல் சோரமுன்னின்ற மாதரசியின் துகிலை உரியும்பொருட்டு தமையன் கட்டளைப்படி துச்சாதனன் அருகே போகிறான் அப்போது அவனடைந்தமனோநிலையை “அருகணுகி மடவரலை யஞ்சாது துகிலுரிவானடர்ந்தபோதில், இருகை நறுமலர் குவிய எம்பெருமானிணையடிக்கே யிதயம் வைத்தாள்”. எனவிபரிக்கிறார் வில்லிபுத்தூரார். அதாவது, இரு கைகளையுங்கூப்பி எம்பெருமான் திருவடிகளை இதயத்தே வழுத்தி நின்றாளாம். ஆனால் துச்சாதனன் துகில் பிடித்துரியத்தொடங்கினதும் அவளின் ஒரு ஒருகரம் அனைநக்தடுக்கக் கீழேவந்து இடுப்பில் துணியை இறுக பற்றியது. துச்சாதனன் மிருகசக்திக்குமுன் இத்தடை பலிக்கவில்லை. துகில்களை பட்டு மானத்தைக்காக்க ஒரே சுற்றுத்துணி மாத்திரம் எஞ்சியிருந்தது. இந்த அபாய நிலையில் தான் திரௌபதைக்கு இறைவன் அருளைவிட பிறிதோர் கதியில்லையென்ற நம்பிக்கையும் அதனால் பூரணசரணாகதியும் உதித்தன- அதன் விபரத்தை வில்லிபுத்தூரார்வாக்கிலேயே படித்துமகிழ்வோம்.

“ஆறாகியிருதடங்கண் அஞ்சனவெம்புனல் சோரவளைகஞ்சோர
வேறானதுகில் தகைந்தகைசோர மெய்சோரவேறோர் சொல்லுங்
கூறாமற் கோவிந்தா கோவிந்தா வென்றரற்றிக் குளிர்ந்தநாவில்
ஊறாதவமிழ் துறவுடல் புளகித்துஉள்ள மெலாமுருகினாளே”

மேல்நடந்தது யாரும் அறிந்தவிஷயம்: கிருஷ்ணபகவானின் அருளால் அவள் உடுத்திருந்த துகில் அளவற்றநீளமாக, அதனை உரியமுடியாது துச்சாதனன்கை அலுத்துக் கீழேவிழ, பதிவிரதையின்மானம் காப்பாற்றப்பட்டது. இந்த உதாரணத்தில் சரணாகதி முதலில் பலிக்காததிற்குக்காரணமும் பின்னர் அது சித்தியானதின் காரணமும் ஒருங்கே விளக்கப்பட்டுள்ளன. ஸ்ரீராமக்கிருஷ்ண தேவர் அருளிய உபகதைகள்பல சரணாகதியின் தத்துவத்தை சிறுகுழந்தைகள் தாமும் விளக்கக்கூடிய எளிய இனிய

நடையில் விபரிக்கின்றனர். விரிவஞ்சி அவற்றிலிருந்து உதாரணம் எடுக்காது விடுகின்றோம்.

மேலே காட்டிய உண்மைகளிலிருந்து, ஒருவன் மனப்பூர்வமாக முற்றிலும்தன்னை இறைவனிடம் ஒப்படைத்துவிடுவதென்பது அவ்வளவு எளிதான விஷயமல்லவென்பதை வாசகர்கள் நன்குணரலாம். உள்ளத்தில் தூய்மையற்றவர்கட்கும் ஆசைகள் நீங்கப்பெறாதவர்கட்கும், வாழ்க்கை வேறாகவும் வாய்ச்சொல்வேறாகவும் நடப்பவர்கட்கும், சரணாகதிக்கும் வெகுதூரமென்பதை நாம் எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. அநேகர், 'நான்' என்பதற்குப்பதிலாக 'இவன்' எனப்பேசியோ எழுதியோ, அல்லது 'தாஸர்கள்' எனத்தம்மை அழைப்பதினாலோ சரணாகதி செய்துவிட்டதாக நடிக்கிறார்கள்; இவ்விதபோலிச்சாதுக்களின் வெளிவேடத்திலும், அவர்களின் புளுகுக்கட்டுகளிலும் பொய்க்கதைகளிலும் மயங்கி அவர்கட்குத்தாஸர்களாகத் தாழ்பணியும் அறிவிலிகளும் பலர்உளர். உண்மையான ஆத்மீகவாழ்வு என்றால்என்ன, அதற்குவேண்டியகுணங்களெவை என்பதை ஆழ்ந்துஆராயாத குறையே இவ்வித அறியாமைக்குக் காரணமாகும். சரணாகதியும் ஈசுராநுபூதியும்ஒன்றேயென்றஉண்மையை வாழ்க்கைமூலம் உலகுக்கருளிய மகான்களின் சரிதைகளை அரைகுறையாக வாசித்துவிட்டோ. அல்லது பிறர்பேசச் சிறிது கேட்டுவிட்டோ தாமும் அவர்கள் நிலையை அடைந்து விட்டதாகக் காட்டுவோர் தம்மையும் பிறரையும் ஏமாற்றுபவர்களாவர். ஆனால் அவர்களுடையஉள்ளத்தை ஆராயும் கடவுளை ஏமாற்றமுடியாது. எனவே அவர்களின்போலித்துறவை ஓர் நாள் உலகு அறியவேநேரும். "தன்கடன் அடியேனையுந்தாங்குதல், என்கடன் பணிசெய்து கிடப்பதே" எனக்கூறும் நிலையை அடைவதற்குமுன் அப்பர் சுவாமிகள் "அலந்தேன் அடியேன்! அருளாய்" எனப்பாடி அழுததையும், "நன்றேசெய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று ஆனந்தலயமடையுமுன், மணிவாசகர், "நீ அருள் இலை ஆனால் வார்கடல் உலகில் வாழ்கிலேன்" எனப்புலம்பி உருகியதையும், சரணாகதியென்றால் ஏதோவிதசெப்படிவித்தை எனக்கொள்ளும்போலிச்சாமிகளுக்கு நினைவூட்டி இக்கட்டுரையை முடிக்கிறோம்.

—....—

# சைவமும்...வைணவமும்

(யோகி ஸ்ரீ சுத்தானந்தர்)

உலகம் நடக்கவேண்டுமானால் முத்தொழில்கள் எந்நேரமும் நடைபெறுதல்வேண்டும். தோற்றம், வளர்ச்சி, அழிவு இம்மூன்றும் எங்கும் என்றும் நடப்பன. நாம் பிறக்கிறோம், வளர்கிறோம், மறைகிறோம். செடிகொடிகள் வித்தினின்றும் முளைத்துக்கிளைத்து, தளிர்ந்து, மலர்ந்து, காய்த்துக்கனிந்து முதிர்ந்து பட்டுமண்ணாகி, உரமாகி மறுபடியும் மரமாகித் தழைக்கும். அதுபோல், இறைவன் அருளும், உலகை ஆக்கி, அளித்து அழித்து, மறைத்து அருளி முன்னேற்றும். ஆக்கும்போது அயன் காக்கும்போது அரி, அழிக்கும்போது அரன் என்று பரம்பொருளின் வல்லமையை அழைக்கிறோம். முத்தொழிலும் வேண்டும், மும்மூர்த்திகளும் வேண்டும். ஆதலால் மூர்த்தி பேதங்கொண்டு போராடுதல் மடமையாகும்.

சிவன் என்பது மங்கலந்தரும் இன்பப்பொருள்: அது பொது நிலைப்பரம்பொருள். அதுவே பிரமாவாக ஆக்கி, விஷ்ணுவாகக் காத்து, ருத்திரனாக அழித்து, மகேசனாக மறைத்து, சதாசிவனாக அருளும் பரமாத்மா. அதை அன்பால், அருளால் அறிவால் அடைந்து இன்புறும் சன்மார்க்கமே சைவம். விஷ்ணு என்பது எங்கும் நிறைந்து எல்லாஉயிர்களையும் பக்தி மார்க்கமே வைஷ்ணவமாகும். இரண்டிற்கும் வேதம் தந்தை, ஆகமம் தாய். இரண்டும் சுத்தசக்திமயமான ஒருகடவுளையே இரண்டுபெயர்களால் வழிபடுகின்றன. இரண்டும் உலகை இறைவன் ஆலயமாகவும் வாழ்வை அவன் ஆடலாகவும் காண்கின்றன. இரண்டும் உயிர் உலகம் இறைவன் ஆகிய பொருளை ஒப்பும். பற்றறு முத்தியை விரும்பும் அரங்கப்பெருமானும், அணுவணுவிலும் ஆடல்புரிகின்றான். சிற்சபேசனும் நடராஜனாக உயிர்தொறும் திருவிளையாடுகிறான்: திருமால் பாம்புபோலச்சுழன்றோடும் அணுக்களில் பள்ளிகொண்டிருக்கிறான். குண்டலிப்பாம்பில் உறங்குகிறான் சிவனோ பாம்பினை அணியாகப்பூண்டு விழித்திருந்து

நடனமாடுகிறான், இருவரிடமும் பாம்புள்ளது. மகாகுண்டலி சக்தியுள்ளது இருவரும் ஹரிஹரனாகச் சேர்ந்தகதையும்உண்டு.

"சிவாய விஷ்ணு ரூபாய சிவரூபாய விஷ்ணவே
சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு விஷ்ணுஸ்ய ஹ்ருதயம்சிவ"

என்பது யசுர் வேதிகளின் ஸந்தியோபாசனையில் வரும் மந்திரமாகும், புருஸ ஸுக்தம் "உள்ளடநடுவே மழை மின்னல் போல் ஒளிரும் சுத்தசக்திப்பொருளே பிரம்மவிஷ்ணு, இந்திரன், பரமன், பரம்பிரமன், புருஷன்" என்கிறது.

நம்மாழ்வார், இந்தக்கடவுளொருமையைச் சொல்கிறார்கேளுங்கள்,

"யாவையும் யாவரும் தானாய் அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்திற்கும் சொலப்படான் உணர்வின்மூர்த்தி;
ஆவிசேர் உயிரின் உள்ளான்; யாதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக்கூடில் அவனையுங் கூடலாமே;
ஒளிர்மணி வண்ணன் என்கோ ஒருவனென்றேத்த நின்ற
நளிர்மதிச் சடையன் என்கோ நான்முகக் கடவுள் என்கோ"
மணிவாசகரோ;

"ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி"
"ஈசனே நீ யல்லதில்லை இங்கும் அங்கும் எங்குமே"

என்றுபொதுநிலைப்பொருளையே பாடுகிறார்,

ஏதலனூர் ஏதவன்பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்? ஓயாதே உள்குவான் உள்ளிருக்கும் உள்ளான், ஊனாய் உயிராய, உணர்வாய் என்னுட்கலந்து, தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்த் தித்திக்கும், ஆனந்தப் பொருளைப்பாடுகிறார் வாசகர். தேவாரம், திருவாசகம் திருவாய்மொழி ஆகியவும்மறைகளும்

ஓங்காரமாகி ஒளியாய் உயிர்க்குயிராய்
நீங்காதான் இன்ப நிறைவு— என்பதையேற்கும்'

"எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பாரே
அவ்வண்ணம் ஆழி யாகும்"

# உலகம் துன்பம்:

[பரமாநந்தவல்லிஅம்மையார்]

இவ்வுலகில் இன்பதுன்பமென இருவினைப் பயன்களுள. அவற்றுள் மக்கள் கருத்தைக்கவர்ந்து கவலையை ஒழிப்பது இன்பமே. ஆதலால் இன்பமே தலைசிறந்ததென்று எந்நாட்டினரும் விரும்புவது இயற்கையாகும். எனவே துன்பமென்றால் அது காஞ்சுரங்காய் என்று கசந்து விடுவார்கள். ஆதலினாலேயே இன்பமெது? துன்பமெது? என அறியப்புகுந்து உத்தமர்கள் உலகிலுள்ளயாவும் துன்பமுடைய தெனக்கண்டு துன்பத்திற்கே முதலிடங்கொடுத்தனர். எனவே நாமும் இன்பமெது? துன்பமெது? எனச்சீர்தூக்கி ஆராயின் அவ்வுத்தமர்கள் கூற்று அங்கே இலங்கக்காணலாம்.

---

முற்பக்கத்தொடர்

"ஊன்கண்டாய் நன்நெஞ்சே உத்தமன் என்றும்
ஊன் கண்டாய் உள்குவார்உள்ளத்தே"

"தானே தனக்குவமன் தன்னுருவே எவ்வுருவும்
தானே தவவுருவுந் தாரகையும்--தானே
எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்து
இருசுடரும் ஆய இறை" என்றனர் ஆழ்வாராதிகள்

உள்ளமாய் உள்ளத்தே உள்ளாய் போற்றி!
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி!
ஓசைஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
நாரணன்காண் நான்முகன்காண் நால்வேதன்காண்
ஞானப்பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன்தான்காண்

என்றுபாடுகிறார் திருநாவுக்கரசர்.

---

இன்பம் அனுபவிக்க எழுந்தவர்கள் பலராவர். அதில் பணத்தினுல் இன்பமனுபவிப்பவர் ஒரு வகையினர். மனைவி மக்களினுல் இன்பமனுபவிப்பவர் இன்னேர் வகையினர். காணிபூமியில் இன்பமனுபவிப்பவர் இன்னுமோர்வகையினர். கல்வி கேள்விகளினுல் இன்பமனுபவிப்பவர் பிறிதோர் வகையினர். பட்டம் பதவியினுல் இன்பமனுபவிப்பவர் வேருேர்வகையினர். இன்னும் அநேக உலகப்பொருள்களில் ஈடுபட்டு இன்பமனுபவிப்பவர்களை இவ்வுலகில் என்றுங்காணலாம், என்னே! இவ்வின்பக்காட்சி நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவினுலன்ருே இத்தகைய இன்பங்களை நிலையான இன்பமென மேற்கொள்கின்றுனர்.

இத்தகை இன்பத்திற்குள் துன்பம் இலைமறைகாய்போல் இலங்கக்காணலாம். அவ்வாறு கண்டவர்கள் சிலர். கண்டும் அத்துன்பமான இன்பத்தைத் தவிர்த்தவர் சிலரினும்சிலர். இவ்வாறு சிற்றின்பப்பேய்பிடித்து உடலுக்கு உழைத்ததேயல்லாமல் உள்ளம் ஓய்ந்ததேயில்லை. தம் மெய்வருந்தி இன்பத்தை அனுபவிக்குஞ்சமயத்தில் அது கிட்டாதுவிடின் அவனுள்ளத்தில் துன்பமே குடிகொள்கிறது. இதற்கு ஓர் சிறு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

ஓர் இளங்குழவி தன் அன்னையிடமிருந்து ஓர் அப்பத்தைப் பெறுகிறது. தன்கையில் அப்பத்தைப்பெற்றவுடன் அளவில்லாத ஆனந்தமுண்டாகிறது. அவ்வானந்த மேலீட்டினுல் தம்முடன் பயிலும் குழவிகட்குக்காட்டுவான் விரும்பி வீட்டிலிருந்து வெளியில்வந்த உடனே ஒரு காக்கை அதனைக் கவர்ந்துவிடுகிறது. அக்குழவியின் இன்பம் அங்கே துன்பமாகமாறிப் பெருங்கூச்சலிட்டு அழத்தொடங்கியது. என்னே! இத்துன்பத்தை யார்தான் அடைப்பார்? இன்னும் அக்குழவி தன்னிடமிருந்து ஒருவருங்கவராமல் தான் உண்டவிடத்து அதனுல்வியாதியுற்றுல் எவ்வளவு துன்பப்படுகிறது, அப்போது அக்குழவிக்கு இன்பம் துன்பமாய்த்தானே முடியும்.

இன்னுமோர் உதாரணத்தை எடுப்போம். சூதாடுவதில் மிக்க விருப்பமுடைய ஒருவனுக்கு யார் எவ்வாறுகூறித்தடுப்பி

னும்: அவனுணரமாட்டான் ஆடத்தொடங்கிய சூதிலேயே அவனுக்கு ஒரு தனியின்பம்பிறக்கிறது. ஈற்றில் அவனுக்கு முன்னில்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்தே உள்ள புகழையும் கெடுத்து விடுகின்றன என்னே!

> "சிறுமை பல செய்து சிரளிக்குஞ் சூதின்
> வறுமை தருவ தோன்றில்"

என்றும் வள்ளுவனார் வாக்கை அந்நேரம் உணருவனா? இல்லை இச்சந்தர்ப்பத்தில் மகா பாரதத்தில் அங்கம்வகிக்கும் பஞ்சபாண்டவர்கள் நிலையை உன்னுவோர்க்குச் சூதினால் நேர்ந்ததுன்பம் தெற்றெனப் புலப்படும்.

இவ்விதம் மின்மினி ஒளிரும் இன்பத்தினால் எத்தனையோ முடிசார்ந்த மன்னரும் முடிவில் பெருந்துன்பத்துக் குள்ளாகின்றனர். இதனை

> யானையெருத்தம் பொலியக்குடை நிழற்கீழ்ச்
> சேனைத் தலைவராய்ச் சென்றோரும்-ஏனை
> வினையுலப்ப வேறாகி வீழ்வர் " நாலடியார்

> "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
> பிடிசாம்பராய்வெந்து மண்ணாவதும்கண்டு பின்னுமிந்தப்
> படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவர்
> அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றறிவாரில்லையே"

என்று பட்டினத்தடிகள் இரங்கிக்கூறும் மொழிகள் அறிவுடையோர் எண்ணற்பாலதாகும்:

இவ்வுலகம் துன்பமெனக்கண்ட உத்தமர்களுட் புத்தபகவானை நோக்குவோம்: அவர் என்செய்தார்? ஆழ்ந்து சிந்தித்தார் அறிவை விரித்தார். தன்னை அறிய அவாஉற்று, மனைவிமக்களை பிரிந்தார் அரசாட்சியை விடுத்தார். கானகஞ்சென்று கடுந்தவமியற்றினார்: தவத்தின் திறனால் அழிவிலா ஞானஒளியைப்பெற்றார் ஞானஒளிகொண்டு ஞானத்தை நோக்கினார். இன்பம் யாவும் துன்பமாய் துலங்கக்கண்டார். உடனே,

"சர்வம் துக்கம் துக்கம்"

என்றஓசை எழுந்து இவ்வுலக துன்பத்தை மக்கட்கு எடுத்துக்காட்டினர்.

இவ்வாறே (இக, உத்தர, அர்த்த, பர, போக, விராகம்) ஆகிய இவற்றை இவ்வுலக துக்கமெனக் கண்டவர், பரலோகத்திலும் துக்கமெனக்கண்டனர். எவ்வாறெனில் இவ்வுலகின்பம் "கானல் நீர், கிழிஞ்சின் வெள்ளி" எனக்கண்டு அவ்வாறே பரலோகத்திலுள்ள அர்த்தபோகங்களையும் அற்பமெனக் கண்டு விடுத்தனர். இவ்வாறு இக, பரலோக இன்பங்களைத் துன்பமெனக்கண்டு வெறுத்தவனே உண்மையை அறியும் அதிகாரியாகும்.

இவற்றைவிடுத்துமக்களனைவரும் கண்டதேகாட்சி, கொண்டதே கோலம் என்று கண்டுமகிழ்ந்தாற்போதுமா? அதில்பவிந்து கிடக்கும் துன்பத்தை நோக்குவார்களா? இல்லை. ஒருகுழந்தை பூமியிற்பிறந்தவுடன் 'வீர் வீர்' என்றுசத்தமிட்டுக்கதறுவதை கண்கூடாகக்காண்கிறோம். அவ்வாறே இறந்தவுடன் சுற்றத்தவர்கள் சத்தமிட்டுக்கதறுவதைப் பார்க்கிறோம். இதற்கிடையில் நடப்பதெல்லாம் கனவின் தோற்றமன்றோ. இவ்வுலகம் இன்பமெனக்கண்டு மகிழவேண்டுமாயின் கனவின்கையிலிருந்து தவறியபொருள் கிட்டியதுபோல்மிகுந்த மகிழ்ச்சியுடன் கண்ணை விழித்துப்பார்க்கிறான். அங்கு ஒன்றையுங்காணாது திகைப்புறுகிறான் இவ்வகையான தோற்றத்தையே காணலாம். இதனால் மக்கள் உள்ளம், சிறடாகக் கூறின் உலகம் துன்பக்கடலென்றே கூறவேண்டும் இதனாலன்றோ

"நீர்க்குமிழிபோல் நிலையற்ற வாழ்வைவிட்டுப்
பேரிரக்கக்கருணை வெள்ளம் பெருக்கெடுப்பதெக்காலம்"

என்று தாயுமானசுவாமிகள் கூறிப்போந்தனர். எனவே இவ்வகைத் துன்பத்தில் நின்றும் விடுபடுவதற்கு வழிகளைக்கோருவோமாக.

[தொடரும்]

—....—

# புத்தியில்லா மனமே!

எடுப்பு

எத்தனை சொன்னாலும் புத்தியில் லாமனமே!
இப்படித் திரிந்தால், நம் அப்பனைக் காண்பதெப்போ
(எத்தனை

தொடுப்பு

வித்தகன் அருளிய விஞ்ஞைமந் திரத்திலே
சித்தம் லயிக்க, அனு தினமும் ஜெபிக்கவென்று
(எத்தனை

முடிப்பு

நான் ஒன்றைக் காட்டி: அதைத் தானுண்ணவேண்டுமெ
ன்றால்
நாய்போல்கண் டதிலெல்லாம் வாய்வைத்துத்திரிகின்றாய்
மோனத்தி லேகிடந்து முதிர்ச்சி யடையவென்றால்
முற்றும் உணர்ந்தவன்போல் வெற்றுவம் பளக்கின்றாய்!
(எத்தனை

அமுதையூட் டிவளர்த்த அன்னையின் இனத்தாரை
அகிலலோ கமாதாவின் அம்சமாய் பணி!என்றால்
மமதைக்கா மசுகத்தை வளங்கும் பொருளென்றெண்ணி
வாழ்வினைப் பாழ்படுத்தி ஆழ்நர கிற்கேசெல்வாய் (எத்

பத்தியில் தினம்நெஞ்சைப் பழக்கி வருகவென்றால்,
பார்ப்பவர் கேட்பவர் பரிகசிப் பார்களென்பாய்;
நித்திரைக் குமுன்பேனும் நிலைத்ததியா னத்தில்ஊன்றி
நில்லென்றால், கணத்திலே துள்ளிப்பாய்ந் தோடிடுவாய்
(எத்தனை

எல்லோ ரிடத்தும்அன்பாய் இதமாக நடவென்றால்!
'இவன்கள்ளன் அவன்பொல்லன்' என்றுவா திடுகின்றாய்
நல்லவ ருடன்கூடி நலம்பல பயிலென்றால்,
நாளைக்கா கட்டுமென்றே வாழ்நாளைக் கடத்துவாய்!
[எத்தனை

"—பரமஹம்ஸதாஸன்"

# அன்பின் சக்தி.

[தென்னாபிரிக்கா டர்பன் திரு ச. மு. பிள்ளை அவர்கள்]

ஒரு வீணையின் நந்திக்கம்பியை மீட்டினால், அதினின்றுகிளம்பும் நாதமானது நாலாபுறமும் பரவிஒலிப்பதுபோல், மனிதன் உள்ளத்திலே சுரக்கும் அன்பானதுஉள்ளத்திலிருந்து மற்றொரு உள்ளத்திற்குப்பாய்ந்து அந்த உள்ளத்தையும் தன் வசப்படுத்திக்கொள்கிறதென்பதை பகவத் பக்தர்கள் அறிவார்கள்.

ஒளியைப்போலவேதான் அன்பும் பரவிச்செல்லக்கூடியது. அன்பினால் மக்களைப்பரவசப்படுத்திவிடமுடியும். அன்பின் சக்தியினாலே நம்மைச் சுற்றியுள்ளவர்களை ஆனந்த பரவசமடையச் செய்து ஆனந்தக் கண்ணீர்விட்டுக் கூத்தாடச் செய்துவிடலாம். அன்பின்சக்தியினாலே மனிதர்கள் மாத்திரமல்ல, மிருகங்களையும் மரங்களையும், கல்லையும் மண்ணையும்இளகச்செய்துவிடலாம்.

அன்பின் சக்தியினாலே ஆக்கக்கூடிய நிகழ்ச்சிகளை சாதாரணமனிதர்கள் பார்க்கும்போது அவற்றைஉதாரண சம்பவங்களென்றும், தெய்வீக சக்தியினால்நிகழும் சம்பவங்களென்றும் சொல்லிவிடுகின்றனர். ஆனால், அப்பேர்ப்பட்ட சம்பவங்களில் அசாதாரணத்தன்மை ஒன்றுமில்லை. அன்பு சக்தியின் தன்மையையறியாதவர்களுக்கே அவை அசாதாரணமாகத் தோன்றுகின்றது.

மிருகங்களுக்கும் செடிகொடி மரங்களுக்கும் உள்ளுக்குள்ளே ஆன்மீக உணர்ச்சி இருந்துகொண்டிருக்கிறது. அந்த உணர்ச்சி ஆவேசமடைந்து வெளிக்கிளம்புவதில்லை. அன்பு சக்தியினாலே அவ்வுணர்ச்சியை ஆவேசப்படுத்தமுடியும். மகான்கள் கல்லைத் தொடும்போது அக்கல்லும் இளகிப்போகிறது. அதற்குக் காரணமென்ன? அந்த மகான்களின் உள்ளத்திலிருக்கும் அன்பின் சக்தியேயாகும்.

மேற்சொன்ன அபாரசக்தியின் மகிமையை நம்முடையகாலத்திலேயே பலமகான்கள் பிரத்தியட்சமாகக் காட்டியிருக்கின்றனர். சரணதாஸ் பாபாஜீ என்னும் மகானுடைய வாழ்க்கையில் நடந்த ஒருசம்பவத்தைக்கூறுகிறேன்.

வங்கதேசத்தில் சரணதாஸ் பாபாஜீ என்ருெருமகான் இருதார். அவர் ஸ்ரீசைதன்யரை சர்வசதாகாலமும் பஜித்துவந்தார். 1902-ம் வருஷத்தில் பின்வரும் தெய்வீக சம்பவம்நிகழ்ந்தது. பாபாஜீ நாடியாஜில்லாவில் கிருஷ்ணகர் என்னும் ஊரிலே சப்ரிஜிஸ்டிரார் உத்தியோகம் செய்துவந்த, பாபு யோகேஷ்சன்யால் என்பவரின் கிருகத்தில் விருந்தினராக தங்கியிருந்தார்.

ஒருநாள் மாலே பாபாஜீ கீர்த்தனேபஜனே செய்யத்தொடங்கினுர். ஊரிலுள்ளபக்தர்கள் பலர் அந்தபஜனேக்குவந்திருந்தனர். பாபாஜீ பக்தர்களின் மத்தியில் கூத்தாடிக்கொண்டே கீர்த்தனேயைச் சொல்லிப்பாடிக்கொண்டிருந்தார். திடீரென்று அவர் "அதோபார்" என்று தன்விரலால்சுட்டிக்காட்டி "அதோ தரிசியுங்கள் சைதன்யரை, என்று சொல்லிக்கூத்தாடத்தொடங்கினுர்.

அவர் உணர்வற்றுமெய்மறந்து போய்விட்டார். அவருடைய கண்களிலின்று கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது. உடல் ரோமங்கள் செறித்து நின்றன. அப்படியே பிரக்ஞையற்றுகீழே விழுந்தார்.

அவரைச்சுற்றி இருந்தவர்கள் இடைவிடாமல் பகவான்நாம கீர்த்தனத்தைப் பாடினுர்கள். பகவான் நாமத்தை ஜபித்தார்கள். சற்றுநேரம் கழிந்ததும் பாபாஜீக்கு பிரக்ஞை வரஆரம்பித்தது. மெள்ளக் கண்களேத் திறந்தார். கம்மியகுரலில் "ஹரே கிருஷ்ண, ஹரே ராம, ராதேசியாமா, பஜநிதாய்," என்று பாடினுர்,

மேற்சொன்னவாறு அவர் பாடியதை சுற்றியிருந்தவர்களனேவரும் பாடத்தொடங்கினுர்கள். பாபாஜி ஒரு தூணில்சார்ந்துநின்று கொண்டிருந்தார். கண்களே மூடிப்பாடிக்கொண்டிருந்தார். கைவிரல்களால் யாரையோ சுட்டிக்காட்டிய வண்ணமாக இருந்தார், இந்நிலேமையில் பலமணிநேரம் அங்கு கூடியிருந்தவர்களனேவரும் மெய்மறந்து பஜனேசெய்தார்கள்.

இரவுமணி பன்னிரண்டு ஆயிற்று, பக்தர்கள் பஜனேயை நிறுத்தினுர்கள். பாபாஜீயை அடிபணிந்துவிட்டு தத்தம்வீட்டிற்குச்செல்வதற்காக அவர்நின்றுகொண்டிருந்த இடத்திற்கு மூத

வில் ஒருவர் சென்றார். அவர் பின்னால் அனைவரும் சென்றனர். என்ன அதிசயம்! பாபாஜீ ஸ்மரணையற்று நின்றுகொண்டிருக்கக் கண்டார்கள். அவர்நின்றிருந்த இடத்தைச்சுற்றி பூமியில் கண்ணீர்வடிந்து வடிந்து வெள்ளக்காடாகி இருந்தது. அது அதிசயமல்ல. அதைவிட பெரியதோர் அதிசயத்தைக்கண்டார்கள். அந்தக் கண்ணீர் வெள்ளத்தின்மத்தியில் பளிங்கு கல்லில் இரண்டு திருவடிகளின் வடிவம் ஆழமாகப் பதிந்திருப்பதையும் கண்டார்கள்.

அந்தத்திருவடி வடிவம்வெகுகாலம்மறையாமல் இருந்ததை ஊரில் உள்ளவர்களெல்லாம் தரிசித்தார்கள். அன்பினால் கல்லும் கரையும் என்பதை திருஷ்டாந்தமாகத் தரிசித்தனர்.

மனிதனை மனிதன் தொட்டால் தீட்டு ஒட்டிக் கொள்ளும். பார்த்தால் தோஷம் வந்துவிடும். என்பன போன்ற ஆசாரங்களெல்லாம் சத்தியமல்லாதவை; பகவானுடைய சிருஷ்டியில் உண்டான ஜீவன்களிடத்தெல்லாம் அன்பு செலுத்துதல் என்னும் மகா லட்சியத்திற்கு ஒவ்வாத குணமேயாகும்.

மஹாராஷ்டிரதேசத்தில் 16-வது நூற்றுண்டில் ஏகநாத் என்னும் மகான் ஒருவர் இருந்தார். அவர் ஒருநாள் நதிக்குச் சென்று ஸ்நானபானுதிகளைச் செய்துமுடித்து விட்டு நடுப்பகல் வேளையில் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார். அச்சமயம் கொதிக்கிற மண்ணில் ஓர் தீண்டாத ஜாதிக்குழந்தையொன்று உஷ்ணம் தாங்காமல் அழுதுகொண்டிருக்கக்கண்டார், அக்குழந்தையை அதன் தாய் அங்குவிட்டுவிட்டுமறந்துசென்றுவிட்டாள், ஏகநாதர் அக்குழந்தையை எடுத்துத்தன் தோள்மீது வைத்துக்கொண்டு சேரிக்குச்சென்று ஒவ்வொரு வீடாக நுழைந்து, நுழைந்துகுழந்தை யாருடையதென்று விசாரித்து கடைசியில் அதன் தாயிடம் ஒப்புவித்தார்.

இந்தச்சம்பவம் யாருக்கும்தெரியாது. ஏகநாதருக்கும் சேரியில் சிலருக்கும் தெரியும். அவர் அந்தச்சம்பவத்தையாரிடமும் சொல்லிக்கொள்ளவுமில்லை. ஒருநாள் ஏகநாதர் தனியாக

இருந்து தியானம் செய்து கொண்டிருக்கையில், குஷ்டரோகம் கண்டபிராமணர் ஒருவர் வந்து, ஏகநாதரை அணுகி நமஸ்கரித்துபின் வருமாறு பிரார்த்தனைசெய்துகொண்டார்.

"மகராஜ், நான் வெருகாலமாக இந்தக்கொடிய குஷ்டரோகத்தினால் அவதிப்படுகிறேன். இந்தரோகம் ஒழியவேண்டிவெகு காலமாகதிரியம்பகேஸ்வரி ஆலயத்தில் தவம்புரிந்து வருகிறேன். ஒருநாள் இரவு பகவான் என்மீது கருணைகொண்டு எனக்குப் பிரத்தியட்சமானார். ஆனால் வெகுநாளைக்கு முன்பு தாங்கள் ஒரு பஞ்சம ஜாதிக்குழந்தையை ஆற்றுமணலிலிருந்துகாப்பாற்றி அதன் தாயிடம் சேர்த்தீர்களல்லவா? அந்தப் புண்ணியத்தை எனக்குத்தாங்கள் தானம்செய்துகொடுத்தால் என்ரோகம் தீரு மென்றுசொல்லி, என்மீதுகருணைபுரியவேண்டும் என்றார்.

குழந்தையைக்காப்பாற்றிய அந்த சம்பவம் ஏகநாதருக்கே ஞாபகமில்லை. குஷ்டரோகப் பிராமணன் சொன்ன பிறகுதான் ஞாபகம் வந்தது. அந்த பிராமணனைப்பார்த்து, "அப்பா, அக் குழந்தையை வீடு கொண்டு சேர்த்ததனால் எனக்குப்புண்ணிய மேற்பட்டிருக்குமானால் அந்த புண்ணியத்தை தாராளமாக உனக்குக்கொடுக்கச்சம்மதம். அதுவும் நான் கொடுப்பதனால் உனக்குரோகம் தீர்ந்து சௌக்கியமேற்படுமாகில் கொஞ்சமும்தயங்காமல்கொடுக்கிறேன்; பெற்றுக்கொள்" என்றுசொல்லி, ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக்கொண்டுவந்து தத்தம்செய்துகொடுத்தார்.

ஏகநாதர் தத்தம் செய்துகொடுத்த மறு நிமிஷம் அந்தப்பிராமணனுக்கு ரோகம் நீங்கிவிட்டது. மேற்சொன்ன சம்பவம் உண்மையோ, அல்லது கட்டுக்கதையோ தெரியாது. ஆனால், அக்கதையின் கருத்துத்தான் பிரதானம். மானிடர்களின் மனதில் அன்பும் ஈரமும் இருக்கவேண்டும். அதைவிடச் சிறந்த தவம் வேண்டியதில்லை. மற்றவைதிக அனுஷ்டானங்களெல்லாம், அன்பு வாழ்க்கைக்கு ஈடாகாது.

....—...

புராதனக் கோவில்கள் 6

# நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில்.

(திருவருள்)

---

நமது முன்னோர்கள் கலையைக்கோவிலாக்கினார்கள். இக்கா
காலத்திலே கோவில் எதற்கு? அங்கே அர்ச்சகர்கள் தட்சிணையும்
தேவதாசிகள் நடனமும்தான் மிச்சம். எல்லாம் இருள்மூடிக்கிட
க்கின்றன என்கிறார்கள். நம் முன்னோர் வேதாகமதர்மத்தையே
கோவிலாகக்கட்டி எல்லார்க்கும் தெய்வீகஉணர்ச்சி பரவச்செய்த
னர். அவர்கள் செதுக்கிய சிற்பிகள் கல்லில்பேசும் காவியங்கள்
ஆடல், பாடல், அழகுஎல்லாம் நமது கோவிலில் தெய்வச்சுவை
யேறி விளங்குகின்றன.

"யோகிகள் தியானக்காட்சியில் கண்ட தெய்வ சேதனவடி
வங்களே நமது விக்கிரகங்கள். அவற்றைக்காணும் போது நாம்
கல்லைக்காண்பதில்லை. கல்லிலும் செம்பிலும் பொதிந்துவிளங்கும்
தத்துவத்தையே கண்டு வணங்கிறோம். நமது நாட்டு நாகரீகம்
இந்த அருட்கோவிலைச்சுற்றியே அமைந்தது இக்கோவில் தொ
ண்டர்கள், பயனை இறைவனுக்கே நிவேதிக்கிறார்கள். அருட்
பாவலர் தமது வாக்கில் உள்ளக்கோவிலானை உருக்கமாகப்பாடி
னார்கள்"......என்று கவியோகி சுத்தானந்தபாரதியார் அவர்கள்
தாம் எழுதிய சுயசரிதையான ஆத்மசோதனையில்குறிக்கிறார்கள்.
ஆகா! அன்னாரின் வாக்கு மணிவாக்கே! அதை எழுத்தில் பொறி
த்தால் போதுமானதல்ல! தங்கத்தகட்டில் பொறித்து தலைவா
சலிலே அறையவேண்டும். இந்தநியமங்களை அடிப்படையாகதா
ரமாகக்கொண்டே எனது புராதனக்கோவில்களின் ஆராய்ச்சிவளர்
ந்துகொண்டுபோகிறது.

யாழ்ப்பாண அரசு தலைசிறந்து விளங்கியகாலை
யில், அதன்நடுநாயகமான தலைநகராக நல்லூர் திகழ்ந்தது. கி. பி.
1478ல்கனகசூரியன் மூத்தபுதல்வனான பரராசசேகரம் என்பவ
ர்சிங்கைப்பரராசசேகரன் என்ற விருதுடன் அரியாசனம் ஏறி
னார். யாழ்நகர அரசர்களுள் எடுத்துப்பே சப்படுபவர்

இவரேயாகும். இவர் அன்று செய்த தொண்டின்மாண்பை இன்றும் நாம் காணக்கூடியதாக இருப்பது ஓர் பாக்கியமே!

சிங்கைப் பரராசசேகரன் இந்துசமய வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்தார். நல்லூரை அழகுசெய்வதற்காக யமுனையின் புண்ணிய நீரை எடுப்பித்தாரென்றால் சொல்வதற்குள்ளதானிருக்கிறது: யமுனையின் தீர்த்தம் தெளிக்கப்பட்டதனால் யமுனாரிஎன்ற ஏரி இன்னும் நல்லூரை அழகு செய்துகொண்டு பண்டையக் கந்தசுவாமி ஆலயத்தை ஞாபகப்படுத்துகிறது: இத்துடன் மன்னன் நின்றாரா? இல்லை! நல்லூரை இந்து சமயத்தின் ஆதிஉறைவிட மாக்குவதற்காக நான்கு திக்குகளிலும் நான்கு ஆலயங்களை எடுப்பித்தார். அந்த வகையில் மேற்கே வீரமாகாளிஅம்மன் சன்னிதானத்தை அழகுற அமைத்து புகழ் உடம்பெய்தினார்.

பெயரே வீரமாகாளி! வீரத்தின் தன்மை பெரிதாகிக்கொண்டு வளருகிறதேயன்றி இன்னும் குறைந்த பாடாய்க் காணாதது எம்பாக்கியமேயாகும்.

பண்டையஉருக்குலையாமல் பண்புடன் திகழும் வீரமாகாளி அம்மையாரின் ஆலயம். இன்னும் அருஅபொழிந்து கொண்டே இருப்பது தமிழர்களின் தவப்பயனேயாகும்.

நல்லூரின் மேற்குத்திசையின்கண் வண்ணார் பண்ணையின் கிழக்கு எல்லையில் அமைந்திருப்பதினால் இன்று இரு ஊர் வாசிகளும் அம்மையைப்போற்றி அருள்பெறுகிறார்கள்.

பிரதிஷ்டை செய்யக் கூடிய வீதிகள் சிறப்புடனிருப்பது போற்றக்கூடியசெய்கையாகும். கொடிஸ்தம்பம் இன்னும் நல்லநிலமையிலிருக்கிறது. அம்மைமாரின் ஆலயம்புராதனமானதென்பதை அங்கங்கே கற்களில் செதுக்கப்பட்டிருக்கும் தத்ரூபங்களே இனிதுபகரும். கோவிலின்மேற்குவீதியில் செதுக்கப்பட்டவெள்ளைக்கற்கள் இன்னும் இருக்கின்றன. இது மூன்றுமட்டுமல்ல! இன்னும் பல புராதனப் புதுமைகள் அம்மையின் ஆலயத்தை அலங்கரிக்கின்றன.

கற்பத்திலிருக்கும் கற்களினால் பொழியப்பட்டது. பார்ப்பதற்கு வசீகரசக்தியை அளிக்கும் கற்பக்கிருகம் கல்தானோவென்று ஐயுறவேண்டியிருக்கிறது. வீதிகள், மாமியாமூலை அனைத்தும் பண்டைக்காலச்சிற்பிகள் கைத்திறமையைக் காட்டி நம்மையெங்கேயுள்ள சுவர்க்க லோகத்திற்கு அழைத்துச் செல்கின்றன, புராதனக்கோவிலின் உருவைக்குலைக்காமல் இன்று வரை பாதுகாத்துவரும் நல்லூர்வாசிகளையேநாம் உண்மையிலே பாராட்டவேண்டும்.

அம்மையின் ஆலயம் முன்னொரு போது அரசாங்கத்தின் சொத்தாகத்திகழ்ந்தது. ஆனால் இன்றோ சிலபிராமணஉத்தமர்களும், சிலபணக்காரர்களும், நிர்வாகசபைக்குழுவாகவிருந்துஊர் மக்களின் பொதுச் சொத்தாகப் பரிபாலித்து வருகின்றனர்.

கோவிலின் மேற்கே ஓர்செங்கழுநீர்த்தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. இத்தொட்டியைச்சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் அமைத்தார்கள். இலகுவான வழியில் சமுநீர்பலர் பெறுதற்கு இது உதவியாக இருக்கிறது. கோபுரத்தின் முன் மேற்குப்பக்கத்தில் பங்கையாசனன், ஒருதலைகிள்ளிவானவன், வைரவமூர்த்தி ஒருசிறு கோவிலின்கண் வீற்றிருக்கிறார்.

கோவிலின் முன்பு ஓர் குளம்இருக்கிறது. இக்குளம்மிகவும் புராதனமானது. அன்று அம்மனாட்சிகுளம்என்றுஅழைத்தார்கள். மருவி அபமெச்சியாகுளம் என்றழைக்கப்படுகிறது. மன்னன ஆட்சிக்காலத்தில் இக்குளம் மிகவும் தாழ்ந்து இருந்தது. வருணபகவான் கிருபைபுரிந்தால் இறுதிஅடைக்கலம் இக்குளம் தான். அதாவது கோவிலின்கண் இழுக்கப்பட்ட தேர் மிகவும் சிறியது. அதுமட்டுமல்ல பாரமும் கொண்டது ஆம் பண்டையசாதனங்கள் அனைத்தும கனமுடையனதானே! சங்கிலிவேந்தன் போத்துக்கேயரிடம் அகப்பட்டகாலையில் ஓர் நாள் மக்கள் தேர்த்திருவிழா நடத்தினார்கள்! அன்னாட்களில் போத்துக்கேயர் சைவசமயத்திற்கு உலைவைத்தார்கள் அன்னாரின் மதவெறிமிருகவெறியான காலந்தானே! ஆசையினால் பக்தர்கள் அவசரமாகத்தேரை இழுத்துக்கொண்டுவந்தார்கள். தேர் இழுக்கப்பட்ட விசையினால் மிண்டிபோட்டுத்திருப்ப முடியாதபடிபள்

ளத்தினுள் விழுந்துவிட்டது. சுவாமியை மீட்டனரேயன்றித் தேரை மீட்கமுடியாதுபோயிற்று. மழைவெள்ளம், சேறுஆதியவைகள் தேருக்குநாணயம் பூட்டிவச்சிரமிடுவன. நின்றதேர் எந்தவிதமும் எடுக்கமுடியாதபடி நின்றுவிட்டது. சேற்றினுள் புதைந்து காலகெதியில் வெள்ளம் கொணர்ந்த மண் மூட்டைகளினால் மூடப்பட்டுக்கிடக்கிறதென்று வயதில் முதிர்ந்தபெரியோர்கள் கூறுகிறார்கள். அக்கூற்றிற்கு ஏற்றாப்போல் அவ்விடம் இன்றும் மேடாகஇருப்பதைக்காணலாம்.

கோவிலில் சாமப்பூசை, காலைப்பூசை, உச்சிக்காலப் பூசை சாயரட்சைப்பூசை, இரண்டாம் காலப்பூசை ஆகிய பூசைகள் திறம்படநடக்கின்றன. நித்தியபூசையில் ஏதும் பிழையுண்டெனில் அதனைநிவிர்த்திக்கவேண்டும். பிழைகள் தெரிந்திருந்தால் செய்யமாட்டார்கள், தவறுதலாக ஏதும்நடந்தால் அதனை நிவர்த்திக்க திருவிழாஎன்னும் நைமித்திகம் நடைபெறும். அதன்பயனாக அம்மையாருக்கு 18நாட்களுக்குத் திறம்படத் திருவிழா நடத்துவார்கள். இவ்வேளைகளில் விசேடமேளக் கச்சேரிகளும் பக்தகோடிகளின் சிவபுராண ஒலிகளும், சின்னங்காட்டி ஏனம் காட்டுவதுமான சிறுகச்சேரிகளும் நடைபெறும்: தீர்த்தஸ்தலமாக இருக்க ஒரு தீர்த்தமாடுமிடமில்லை. ஆதலினால்தீர்த்தமாடுவது கோவிலுள்ளே நடைபெறுகிறது. புராதனஆலயமாஇருந்தாலும் பார்ப்பதற்கு புது ஆலயம்போல் இருப்பது அம்மையாரின் அருளேதான். வடக்கே சிரஞ்சீவியான ஓர் இடத்தை பெற்ற அம்மையின் அருள் எல்லையற்றதாகும். அவனைச்சேவித்துவணங்குவது ஓர் பாக்கியமே! [வளரும்)

---

"பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தனுகர ணாதிகள்
தன்னின் மறைந்தது தனுகர ணாதிகள்"

—திருமூலர்.

# உய்யவழி.

(அனுமதேயம்)

எங்கு பார்த்தாலும் அமைதியின்மை, ஓரே ஏக்கம், மனஸ் தாபம், துடிப்பு, அலறல் அவலம் நிறைந்த வாழ்வாகவே தோன்றுகின்றது. உற்று நோக்குமிடத்து உண்மை ஒருகால் புலனுகலாம்.

ஒவ்வொரு சமுதாயத்திற்கும்ஒவ்வொருதனிச்சிறந்த பண்பாடும், நோக்கும், உண்டு. அச்சமுதாய உணர்ச்சியினின்றும் வழுவும் சமுதாயம் காலப்பெருவழக்கில் நசித்தேபோகும்என்று கூறிப்போந்தார் வேதாந்தகேசரி விவேகானந்தர்.

தமிழன் என்று ஒரு இனம் உண்டு. தனியாய் அவனுக்கு ஒருபண்பு உண்டு, என்பதேபோல் ஒவ்வோர் சாதியாருக்கும் ஒவ்வோர்குழுவினருக்கும் தேசத்திற்கும் தலைசிறந்த பண்புஒன்றுண்டு. கீழ்நாட்டாரின்ஒப்பரிய அப்பண்பேஆத்ம ஞானம் இதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும். சொல்லளவில் வைத்திருந்தால்போதாது. செயல்அளவில் காட்டவேண்டும்.

எம் ஆத்மா சுத்தமாக இருக்கவேண்டும். அதன் சக்தி பெருகவேண்டும் உடலின்மீது உள்ளமோகம் நாளடைவில் ஒழியவேண்டும் அதுவேஇன்பமாகும்.

ஒருகுடும்பத்தை எடுப்போம். உடல், பொருள் முதலியவற்றில் அதிமோகமுள்ள அங்கத்தவர்கள் இருப்பார்கள். ஆனல் சதாகாலமும், சண்டையும், சச்சரவும், பாகப் பிரிவினைகளும், கடைசியில் கோடு, கச்சேரி என்று அலைந்து, அல்லலை அனுபவித்து இறக்கின்ருர்கள். ஒரு சிறு ஆன்மநேயம் உள்ளவர்கள் உள்ள குடும்பத்திலோ, இவ்விதமின்றி ஆபத்திற்கு உதவி. உள்ளதைக்கொண்டு உவகை அடைந்து, தனுபம்காத்து வாழ்க்கை ஒரு சாந்தியோடு கழிகின்றது. இது நாம் வாழ்க்கையில் காணும் உண்மை. தம்சுகம் நயம்மறந்து, சிசுவில் கண்ணுங்கருத்துமாய் வாழும் தாய்தந்தையரின் பண்பு எதற்கு?

இரண்டாவதாக பலர் கூடிவாழும் ஒருவிடுதிச்சாலையையோ அல்லது ஒரு பொதுக்கழகத்தையோ எடுத்துக் கொள்வோம் தன் சுயநலமே கண்ணாகவும், மற்றையோரின் நலத்தைப்பற்றிச் சிறிதேனும் கவலையின்றியும் உள்ள ஒருநபர்தான் அங்கு இருப்பினும் அப்போது இடத்தின் அமைதியும் சூழலும் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை விடுதிச்சாலைகளிலும் பொதுக் கழகங்களிலும் வாழ்ந்தோருக்கு நன்ருகவிளங்கும்.

ஆன்மநேயமும், சமநோக்கும் தன்னலமற்றஒருமேலதிகாரியின் கீழ்வேலைபார்க்கும் சிப்பந்திகள் எவ்வளவு நிம்மதியாகவும் உணர்ச்சியுடனும் வேலைசெய்கிறுகள் என்றும் அல்லது சுயநலம் பொருள் ஆசை பதவிமோகம் கொண்டஒரு மேலதிகாரியின்கீழ் கடமையாற்றும் சிப்பந்திகள் படும் அவஸ்தையும் அல்லலும் நாம் தினமும் கண்ணாரக்காண்பவை.

நாட்டைப்பரிபாலிக்கும் அரசாங்கத்தையே எடுத்துக்கொள்வோம். அங்கு கடமையாற்றும் ஒவ்வொரு ஆன்மாவும் தன்சுயநலமே கருதி; பொருள் ஆசையும் உடலாசையும், போகமெனக் கருதி, ஆத்மசாந்திக்கு இழிவான, அதர்ம காரியங்களில் இறங்கிஞல் அந்நாட்டின் நிலை. என்னவாக முடியும்? மக்களின் பழி அரசாங்கத்தைச் சாரும். ஆனுல் இவ்வரசாங்கம் என்பது யார்? வியாதிபிடித்த அடிவேர்எங்குஉளது? எனப் பாமரமக்கள் அறியார்.

நேர்மை, சத்தியம், வாய்மை, பொதுமை, மன்னிப்பு, சமநோக்கு என்ற பெரும்குணங்களைப் பேச்சுவாக்கில் கேட்கிறேமேயன்றி வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டு வருவோம் ஆயின் அதன்பலன் நன்கு தெரியும். உடல் இச்சைக்குவாழாது ஆத்மசுத்தியைக்கவனித்து ஆத்மபலத்தைப்பெருக்கி ஆத்மஒளியைவீசச்செய்வதே ஒப்பற்ற உய்யும்வழி.

உலகிலே சமதர்மம், பொதுஉடமை குடிஅரசு போன்ற பல்வேறு கொள்கைகள் எல்லாம், உண்மை, சத்தியம், உலகநன்மை என்பவற்றையே அடிப்படையாகக்கொண்டவை. எல்லாம்சாலச் சிறந்தகொள்கைகள். ஆனுல் இவற்றைக் கடைப்பிடித்து ஒழு

# ஆத்மசிருஷ்டியில் ஒற்றுமையே உலகசமாதானத்திற்கு வழி.

டக்டர் சர்வேபல்லி ராதாகிருஷ்ணன்

இரண்டாவது உலகயுத்தமானது, உலகத்துச்சர்வ ஜனங்களும், சர்வஜாதியினரும், சர்வகலைப்பண்புகளும் ஒன்றுபடுத்துவதற்கான சந்தர்ப்பத்தை அளித்திருக்கிறது. எந்தஒருநாடும் இனித்தனித்துவாழமுடியாது. எல்லோரும், எல்லாரையும் நம்பிவாழவேண்டியநிலை ஏற்பட்டுவிட்டது. அதாவது, பரஸ்பரஉதவியுடனேயே எல்லோரும் வாழவேண்டும். நாகரிகமானது, ஐரோப்பியநாகரிகமென்றும், ஆசிய நாகரிகமென்றும்பிரிவினையற்றுப்போய் உலகநாகரிகமாகமாறிக்கொண்டுவருகிறது.

உலகசமாதானம் என்பது உலகசமாதானத்தைத் தவிரவேறுசமாதானமேகிடையாது. ஆத்மார்த்தமானஒருலட்சியம் மட்

---

முற்பக்கத்தொடர்ச்சி

கும் மனிதர்கள், இருதயம், மூளை, புலன்கள் இந்திரியங்கள்முதலியவற்றால் இயங்கும் ஆன்மாக்கள். ஆதலினால் இவ்வான்மாக்கள் அபிவிருத்தி அடையவேண்டும். விதைக்கும் விதை நல்லவிதை ஆனால் அதுவிழும்நிலம் தரிசாக இருந்தால்! பலன் பூச்சியம்.

சுய நல இன்மை, பற்றுஅற்ற சேவை, நன்மையேஎண்ணும் மனம், இரக்கமேகொண்ட இருதயம், வாய்மைநிறைந்தசொல், அருள் ஒழுகும் கண், அறம் வீரம்செறிந்த நெஞ்சு, முதலிய ஆன்ம அபிவிருத்தியை மிஞ்சிய சமதர்மம், அல்லது பொதுஉடமை, அல்லது குடியரசு முதலியன நமக்குச் சாந்தியளிக்கப்போவதுகிடையாது. ஆதலால் ஒவ்வொருவரின் ஆன்மநோக்கும் விருத்திஅடையவேண்டும். ஆன்ம ஒளி வீசவேண்டும்; இதுவே நாம் உய்ய ஒப்பற்ற வழி.

---

டுமல்ல, அரசியலைப்பொறுத்த அவசியமுமாகும். இருக்கிறகாலமோ சொற்பந்தான்; ஆனால் நம்முடைய தேவையே அதாவது உலகசமாதானம் என்கிறதேவை- பெரிதும் அவசியமாயிருக்கிறது. ஓர் உலக சமுதாயத்தின் அங்கத்தினர்களாக நாம்வாழ வேண்டுமானல், நாமெல்லோரும் ஆத்மதிருஷ்டியில் ஒற்றுமையுடைவர்களாயிருக்கவேண்டும். அதாவது எல்லோரிடத்திலும் இருக்கிற ஆத்மா ஒன்றுதான் என்றஉணர்ச்சி பெறவேண்டும்; இந்தஉணர்ச்சியை வளர்க்க நாம்பாடுபடவேண்டும்.

ஒவ்வொரு மதத்திலும், அதனதனுடைய உட்பிரிவுகளை ஒன்று படுத்துகிற இயக்கங்கள் தோன்றுகின்றன. இங்ஙனம் உட்பிரிவுகளை ஒன்றுபடுத்துகிற இயக்கமாவது, உலகத்தில் நிலவிவரும் பலமதங்களையும்ஒன்றுபடுத்துகிற இயக்கமாக விரியவேண்டும். மதங்களுக்குள் வேறுபாடுகள் இருக்கலாம்; அதற்காக ஒன்றுக்கொன்று பிணக்குவேண்டியதில்லை. ஒரு மதத்திலுள்ள ஒவ்வோர் உட்பிரிவினரும், தங்கள் தங்களிடமே அந்தமதத்தின் உண்மை இருக்கிறதென்று உரிமைகொண்டாடாமல் விட்டுக்கொடுத்து, அந்தமதத்தைச்சார்ந்த எல்லா உட்பிரிவினரும் ஒன்றுபடுவது சாத்தியமாகும்போது, மெய்ஞானமாவது தங்களுக்குமட்டுமே உரிமையுடையது என்று உலகத்திலுள்ள ஒவ்வொருமதமும் சொல்லிக்கொள்ளாமல் எல்லாமதங்களும் ஒன்றுபடுவது சாத்தியமேயென்று நாம் ஏன் நம்பக்கூடாது?

மதத்தின் உண்மைதங்கள் ஒருவரிடத்தில்மட்டும்தான் இருக்கிறதென்று எல்லாமதத்தினரும் உரிமை கொண்டாடுவதே பாரமார்த்திக விஷயத்தில் எல்லோரும் ஒன்றுபடுவதற்குப்பெரிய தடையாயிருக்கிறது. மதக்கோட்பாடுகளென்பவை, மதத்தின் லட்சியத்திற்கு வழிகாட்டிகள். இவை, வார்த்தைகளைக் கடந்து மௌனியாகி, பேரானந்தக்காட்சியில் ஈடுபடுமாறு நமக்குக்கட்டளையிடுகின்றன. இங்ஙனம் ஈடுபடுவது ஒவ்வோர் ஆத்மாவினுடைய வேலையுமாகும். நித்தியமானதும் பூரணத்துவமுடையதுமானஉண்மை, தங்களுக்கே உரிமையானதென்றுசொல்லிக்கொள்கிறவர்கள், தங்களுடைய அன்பினாலும் அறிவினாலும் மற்றவர்களை அதாவது வெறுனபாதையில் செல்லுகிறவர்கள்

என்று தாங்கள் எவர்களை நினைக்கிறார்களோ அவர்களை, மாற்ற வேண்டும். மதவெறியானது கோட்பாடுகளுக்காகவும், சடங்குகளுக்காகவும், எத்தனை சண்டைகளைப் போட்டிருக்கிறது? எத்தனைபேரைக் கொன்றிருக்கிறது? எத்தனைபேரைத்துன்புறுத்தியும், சிறையிட்டும், எரித்தும் இருக்கிறது? இவையெல்லாந்தான் மதத்தின் புனிதமான பெயரைக்களங்கப் படுத்தியிருக்கிறன. ஒவ்வொருமதத்திலும் முன்னேக்கிச் செல்லும் பலபடிகள் கூறப்பட்டிருக்கின்றன, இவைகளுக்கெல்லாம் அடிப்படையில் இருக்கிறபாரமார்த்திக லட்சியம் ஒன்று நாம்சிறிது சிந்தித்துப்பார்த்தால் நன்குதெரியும். பாரமார்த்திக உண்மைகள் பல்வேறுதோற்றங்களாகக் காணப்பட்டபோதிலும், ஆத்மபூரணத்துவம் பெற அந்த வேறுபாடுகள் குறைந்து போகின்றன. மலையுச்சியை அடைவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. எந்தவழியில் நாம்சென்றாலென்ன? “தங்களுக்குப் பின்னால் எவ்வித அடையாளத்தையும் விட்டுச்செல்லாமல் எப்படி ஆகாயத்தில் பட்சிகள் பறக்கின்றனவோ, ஜலத்தில் மீன்கள் நீந்துகின்றனவோ, அப்படியே மெய்ப்பொருளை நாடச்செல்கிறபிராணியும் இருக்கின்றான்”. இங்ஙனம் பலவழியில் சென்றபோதிலும், கடைசியில் அந்தப் பிரயாணியும், மலையுச்சியில் ஒரே காட்சியைத்தான் காண்கிறனென்பதே, மதத்தின் உண்மையை ருஜுப்படுத்துகிறது. மெய்ப்பொருள் ஒன்றுதான் என்பதைப்புறக்கணித்துவிட்டு, மதத்தின்வேறுபாடுகளை வலியுறுத்துவது தத்துவரீதியாகச்சரியல்ல; தர்மரீதியாக நியாயமல்ல: சமுதாய ஒற்றுமைக்கு ஆபத்தாகும். இந்தியர்களைப்பொறுத்தமட்டில், மதமென்பது கடவுளிடத்திலே வாழ்க்கையைக் காண்பது. சகோதர மனிதர்களை நேசிப்பது. எல்லாரிடத்திலும் நல்லதைக்காண்பதுமாகும்.

(ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர்
வெ. சா. சர்மா.)

...—...

# பக்திப்பிரகாசம்

(ஸ்ரீசிவானந்தமுனிவர் திருக்கழுக்குன்றம்]

பக்தியை நெஞ்சிலே பதித்தபாக்கியசாலிகளுக்கு வேறொன்றும் அவசியமாகாது. இது ஒன்று மாத்திரமே. மெய்ப்பொருளை எளிதில் அடைவிக்கச்செய்யும். தூய பரிசுத்தமான வாழ்க்கையை நடத்தப்பயப்படாது, மனந்தளராது செய்வதெல்லாம் பத்தியாம். அன்பும் பத்தியும் உண்மையில் மிகப்பெரியதாகும். பக்தியொன்றே ஒருவனுக்கு நிறைந்த மனச் சந்தோஷத்தைத்தருவது. உயிருள்ள சக்தியே பக்தியாகும். இறந்தஉயிர்களைமீண்டும் எழுப்புவதுபக்தி: பக்தியால்பேறுபெற்றஅடியார் எண்ணிலடங்கார். கடவுளின் திவ்யதரிசனத்தை பக்தியொன்றாலேயே நேர்நேராய் அடையமுடியும். பக்திமான்கள்முயற்சியால் கண்கூடாகக்கடவுளை கண்டனர். பக்தர்களுக்கு பரமனும் எண்ணிறைந்தகிருபையோடு பணிசெய்துள்ளான். பக்தியின்பலனாலன்றோ கண்ணப்பர்கடைத்தேறினார். சர்வசுதந்திர முள்ளவனும் எவ்விதச்சட்டதிட்டமும் அற்றவனுமாகிய ஆண்டவன் பக்தர்களின் பக்திவலையில்மட்டும் கட்டுப்பட்டுவிடுகிறான். விதுரான்சகாதேவன் கோபிகைகள், குசேலன், யசோதா பாண்டவர் பாஞ்சாலி முதலியவர்களிடம் கண்ணன் கட்டுப்படவில்லையா? ஈஸ்வரனிடத்திற்செலுத்தும் மனமார்ந்த அன்பேபக்தியெனப்படும்.

உண்மையில் ஒருவன் பக்திமானாக இருக்க விரும்பினால் உலகஎண்ணங்களையும் செயல்களையும் அவன் கடந்துநிற்கவேண்டும். பரிசுத்தமாயிருத்தல், தன்னலமற்றிருத்தல் மாசற்றிருத்தல் இவனது முக்கியவேலைகளாகும். எல்லோரிடத்திலும் அன்புசெலுத்தும்அகண்டசிந்தைபடைத்தவனாக அவன் உலகக்கட்டினின்றும் விடுபடுவான். உலகிலே ஒருவனுக்குஎவ்வளவுகடினமாகக்காணப்பட்டாலும் அதில்அவன் தெளிந்தேதீரவேண்டும். அன்பே எல்லோருடையவும் வாழ்க்கையாகும். உலகில் அதுஒன்றே உண்மைப்பொருள். ஆண்டவனுக்கு ஆழ்ந்த அன்பும் செய்யும்சர்வகாரியங்களையும் ஜீவர்களுக்குச் செய்தாலும் சீவன் சிவனாகிறான். அப்படிப்பட்டோரை ஆண்டவன்எல்

லாத்தீங்குகளிலிருந்தும் விடுவித்துக் காப்பாற்றி ஆசீர் வதிக்கிறான். உனதுநோக்கத்தையும்பக்திமூலம் அவனது திருவடியில் அர்ப்பணித்து சிறுகுழந்தை போன்று, மாசற்றஉள்ளத்தோடு அவனைவழிபடு.

தெய்வத்தை மனிதன் நெருங்குவது அன்பினால் வந்தபக்தி ஒன்றினால்தான். இஷ்டதேவதையிடத்திலே முழு மனதோடு கூடியஒருவழிப்பட்ட அன்பு உதிக்குமாயின், அதுவெள்ளம்போலத்திரண்டு அறியாமையென்ற அஞ்ஞானத்தை அழித்துக்கொண்டோடுகிறது. அச்சமயம் அஞ்ஞானம்நிறைந்த மனிதன் அஞ்ஞானமின்றி மெய்ஞ்ஞானியாகிறான். இச்சமயத்தில்தான் இவனதுஇஷ்டதேவதை இவனது இருதயஆசனத்தில் வீற்றிருந்து கடவுளைத்தவிர மற்ற ஏனையபொருள்களின் மதிப்பைக்குலைத்துக் கடவுளே நித்தியமான பொருளென இவனுக்குத்தோன்றும்படி செய்விக்கிறது. அப்பொழுதுதான் அவன் தன்னிடத்தில் தெய்வம் நிலைத்திருக்க மற்றவை அனைத்தையும் மறந்து இன்பநிலை அடைகிறான். ஆண்டவனோடு தனித்துவாழும் நிலையிலே மனக்கவலையற்றுப்போகின்றான். இந்தநிலையே தெய்வதரிசனமாகிய முடிந்தநிலையாகும்.

உங்களிடத்தில் அன்புமிகுதியால் பக்திவளரவேண்டும். பக்தியால் மனங்கசிந்துருகிக் கடவுளை வழிபட வேண்டும். உங்கள் முழு எண்ணத்தையும் ஒருங்கே கடவுள்பால்செலுத்தி உங்களுக்கு உற்றஉயிர்ப்பிணியின்குறையை ஆர்வத்தோடு அவனிடம் முறையிட்டால், எங்கும் நிறைந்த இறைவன் இதோநான் இருக்கிறேன், வேண்டுவதென்ன? அருளுகின்றேன் என உங்களிடம் பேசுவான். உங்கள் கல்லான மனதை இளகும்படி செய்க. அவனிடத்தில் பூரணகாதல் கொண்டுமனதாரவாழ்த்திப்புகழுக. அப்படிச்செய்வீர்களானால் உங்கள் மனத்திரையை இறைவன் நீக்குவான். அவனது அருட்பெருஞ்சுடரைக்காட்டுவான். இறைவனை அப்படி ஆடிப்பாடித் தோத்திரஞ்செய்தால் உள்ளங்கனிந்து ஊக்கம்பிறந்து உண்மையை அறிய ஏதுவாகும். இறையின் நாமங்களை இதயசுத்தமாகஜெபித்தால் இடம்விட்டோடும்மனமும்இடம்பெயராது. அதோடு இதையும் தாண்டிதியானப்பழக்கத்தில் மனம் இறப்பதுநிச்சயம் என்பதைச் சொல்லவும்வேண்டுமா?

———

# புது வருடம்.

புதுமையில் யாவர்க்குமே ஒருமோகம்; மூத்த குழந்தைகள் பத்துப்பேர் இருந்தாலும் பதினோராம் குழந்தையில் தனிஒரு மோகம். இது ஜீவ இயற்கை. ஆண்டுதோறும் தவறாது ஒரு செக்கன் பிந்தாது புத்தாண்டு பிறந்துகொண்டே இருக்கிறது. ஒருஆண்டில் நாள் தோறும் தவறாது 365 புதுநாட்கள் பிறந்து விடுகின்றன. ஒரு நாள்விடிந்த உடனே மனிதன் துயில்நீத்து எழும்போது ஆண்டவனே உனது சேவைக்குரிய நாளில் ஒன்று வீணாய்க்கழிந்துவிட்டதே. அடுத்தநாளையாவது உனதுசேவைக்காக கழிக்கும்வலிமையைத்தா". என்றவேண்டுதலோடு மனிதன் வீறுபெற்றெழவேண்டும். இப்படியே மாசம் தோறும் வருடம்தோறும் வீணாய்க்கழிந்தநாட்களை நினைவுக்குக்கொண்டு வந்து பயன்பெற வாழ்தலில் உறுதி பூணவேண்டும். இதுவே புதுமை. தன்பிழை ஓர்ந்துதன்கடமை உணர்ந்து உள்ளத்தில் பண்பாடு ஏற்படும்போது ஒருபுதுமை. புதுநாளும், புதுமாசமும், புத்தாண்டும் மனிதனுக்கு இவற்றையே கற்பிக்கின்றன.

"பொன்பழுத்த பரஞ்சோதி பொழியருளி னாலே
புதுயுகமும் புதுவாழ்வும் புத்தாண்டில் பொலிய
அன்புளத்தீர் வாருங்கள் அருட்பணிகள் புரிவோம்!
அசுரபயம் ஒழித்திடவே அதிமனிதர் செல்வோம்!"

"பண்படுத்தி விதைவிதைத்தே, பத்திவெள்ளம் பாய்ச்சிப்
பயிரெனவே உயிர்க்குலத்தைப் பரிவுடனே போற்றி
விண்பழுத்த பேரின்பம் வியனுலகிற் கனிய
வீறுகொண்ட வேலைதொடர் வேளையிது வாரீர்"

## ஆத்மஜோதி அன்பர்களுக்கு
## ஆத்மஜோதி நிலயத்தாரின் புத்தாண்டு வாழ்த்துகள்!

புதுவருடத்தில் பழைய கடன்களை வைத்திருக்கக்கூடாது என்றுசொல்லுவார்கள். இன்றுவரை சந்தாப்பணம் செலுத்தாதவர்கள் புத்தாண்டை நினைந்து அதை அனுப்பிவைத்தால் அதுவே வாசகர்களால் ஆத்மஜோதிக்கு அனுப்பப்பெற்றபுத்தாண்டு வாழ்த்தாகும். உலகவழக்கிற் கைவிசேஷம் பெரியபிரபுக்களிடத்தில் பரிமாறிக்கொள்வதுவழக்கம். ஆத்மஜோதி ஆதரவுள்ளசந்தாதாரரிடம்வரவேண்டிய கணக்கையே கைவிசேஷமாக எதிர்பார்க்கிறது. வாழ்க! சுபம்! சாந்தி!

Registered at the G. P. O: as a News Paper. No. H. C. 59/400

## நால்வர் படங்கள்

நால்வர் படங்கள் பெரிய அளவில்

ரவிவர்மா

கலர் மாதிரியில் தயாரிக்கப்பெற்றவை

ஒவ்வொரு சைவர் இல்லங்களிலும் தவறாது இருக்கவேண்டியது

படம் ஒன்றுக்கு தபால்செலவு உள்பட ரூபா **2·00**

**சரவண அச்சகம்— நாவலப்பிட்டி.**

---

சத்கோண ஷண்முகப்பிரகாசம்,

சரவணபவ எழுத்துப்படம்,

— இவை இரண்டுபடங்களும —

**B. S.** கலிகிராஜா செட்டியாரால்

வெளியிடப்பெற்றவை.

பூஜைக்கும், பார்வைக்கும், தியானத்திற்கும் சிறந்தவை.

படம் ஒன்றுக்கு விலை ரூபா **1–50**

**பாலதண்டபாணி பிக்சர் ஹவுஸ்**

குமாரவீதி — திருப்பூர், (S. I. RY.)

---

## தியானமாலை

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களால்

எழுதப்பெற்றது.

சாதகர்கள் ஒவ்வொருவரும் பயன்பெறத்தக்க

— நூல் —

விலை ரூபா 1–50

**M. O** முருகேசபிள்ளை அன் சன்ஸ்.

நாவலப்பிட்டி.

கௌரவ ஆசிரியா க. இராமச்சந்திரன பதிப்பாசிரியர் நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்)

அச்சுப்பதிப்பு: சரவண அச்சகம் நாவலப்பிட்டி - 13-4-52